DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
----
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TIRUCHENDUR

| | |
|---|---|
| Name : பொன்னுமுனியசாமி | Father/Husband Name : பெருமாள் |
| Age : 59 | Village : ஆத்தூர் காவல் நிலேயம் |
| Taluk : | Calling : உதவி ஆய்வாளர் |
| Religion : | Caste : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 21st May 2026
(All Accused present.)

<u>முதல் விசாரணை</u> :–

1. நான் தற்போது ஆத்தூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். அந்த காவல் நிலையத்தில் பணியாற்றிய தலைமைக்காவலர் அருள்ராஜ் மற்றும் உதவி ஆய்வாளர் பாஸ்கரன் ஆகியோர்களையும், அவர்களுடைய கையெழுத்தும் எனக்கு தெரியும். அவர்கள் இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, இறுதி அறிக்கை தாக்கல் செய்தது குறித்து என்னால் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்க முடியும்.

2. கடந்த 09.09.2025 ம் தேதி 10.00 மணிக்கு தலைமைக்காவலர் அருள்ராஜ் நிலைய பொறுப்பிலிருந்த போது, அ.சா.1 ஆல்பன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண். 184/2025 பிரிவுகள் 296(பி), 115(2), 131, 351(3) BNS ன் கீழான குற்றங்களுக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து உதவி ஆய்வாளர் பார்வைக்கு வைத்தார். **(புகார் மனு அ.சா.ஆ. 2 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும்குறியீடு செய்யப்படுகிறது)**

3. வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்து கொண்ட உதவி ஆய்வாளர் பாஸ்கரன் 09.09.2025 ம் தேதி 11.15 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் எல்டன் ராஜ், ஜேசு ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தையும், அதன் சுற்றுப்புறங்களையும் பார்வையிட்டு பார்வைமகஜர், மாதிரிவரைபடம் தயார் செய்தார். **(மாதிரிவரைபடம் அ.சா.ஆ.4 ஆகவும், பார்வைமகஜர் அ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.)** அன்றயை தினம் **12.05** மணிக்கு மரக்கட்டை ஒன்றை மேற்படி சாட்சிகளை முன்னிலையில் அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றி படிவம் **91** ல் முறைப்படுத்தி நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளார். **(அத்தாட்சி அ.சா.ஆ.6 ஆகவும், படிவம் 91 அ.சா.ஆ.7 ஆகவும், மரக்கட்டை அ.சா.பொ.1 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.)** அவர்கள் இருவரையும் விசாரணை செய்து அவர்களின் வாக்குமூலத்தை பதிவு செய்தார்.

4. சாட்சிகள் ஆல்பன், லிவிந்தன், கெர்சோன், நென்ஸ்டன், ஜெர்சன், குணா, அருள்ராஜ் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். வழக்கு சம்பவத்தில் காயம்பட்ட நபர்களான சாட்சி கெர்சோன், லிவிந்தன் ஆகியோர்களுக்கு சிகிச்சையளித்த மருத்துவர் முகமது நூகு பாரிஸ் என்பவரை விசாரித்து அவர் வழங்கிய விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்றிதழை கிடைக்கப்பெற்றார். அவருடைய வாக்குமூலத்தை பதிவு செய்தார். காயம்பட்ட நபர்களுக்கு ஏற்பட்டிருந்த காயம் சாதாரணகாயம் என்று மருத்துவர் சான்று வழங்கினார். **(மேற்படி விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்றுகள் முறையே அ.சா.ஆ.8 மற்றும் 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

5. வழக்கு சம்பவத்தில் ஈடுபட்ட எதிரிகளை தேடி வந்த நிலையில் 09.09.2025 ம் தேதி 14.15 மணிக்கு எதிரிகள் ரைசன், ஸ்டீபன் ஆகியோர்களை சேர்ந்தபூமங்கலம் பஸ்ஸ்டாப்பில் வைத்து கைது செய்து விசாரித்த போது அவர்களை

விசாரித்த போது எதிரி ஸ்டீபன் தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் ராஜேஷ், சகாயராஜ் முன்னிலையில் பதிவு செய்தார். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அன்றயை தினம் 16.00 மணிக்கு எதிரி ஸ்டீபன் வீட்டிலிருந்து எடுத்து ஆஜர் செய்த கத்தி ஒன்றை மேற்படி சாட்சிகளை முன்னிலையில் அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றி படிவம் 91ல் முறைப்படுத்தி நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளார். **(ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.10 ஆகவும், அத்தாட்சி அ.சா.ஆ.11 ஆகவும், படிவம் 91 அ.சா.ஆ.12 ஆகவும், கத்தி அ.சா.பொ.2 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.)** மற்றொரு எதிரி முன் பிணை பெற்றதால் கைது செய்யப்படவில்லை.

6. வழக்கு விபத்து சம்பவத்தில் எதிரிகள் அஸ்லிம், ஜேசு, ஆகியோர்களை நீக்கம் செய்து எதிரிகள் நீக்கல் அறிக்கை தாக்கல் செய்துள்ளார். **(நீக்கல் அறிக்கை அ.சா.ஆ. 13 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.)**

7. அவருடைய விசாரணையிலிருந்தும், சாட்சிகளின் வாக்குமூலங்களிலிருந்தும் வழக்கு சம்பவம் உண்மையென தெரிய வந்ததால் எதிரி மீது பிரிவுகள் 296(பி), 115(2), 131, 351(3) BNSன் கீழான குற்றங்களுக்கு குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

8. பொய்யான புகார் வாக்குமூலம் பெற்று, எதிரிக்கு எதிராக இந்த வழக்கு பொய்யாக பதிவு செய்யயப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்காவணங்கள் அனைத்தும் எதிரிக்கு எதிராக காவல் நிலையத்தில் வைத்து உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கிற்கும், எதிரிக்கும் எவ்விதமான சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. அ.சா.1க்கு ஏற்பட்டிருந்த காயத்திற்கும், எதிரிகளுக்கும் எவ்விதமான சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Sd. Tr. M. V O Chidambaram,
Judicial Magistrate, Tiruchendur.

True Copy/AS